A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - 1

பிரிவு - 1

I. பலவுள் தெரிக:- 14×1=14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

(i) அ, ஆ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ (iv) அ, இ

2) உலகச் சிட்டுக்குருவிகள் நாள் ________

அ) ஏப்ரல் 20 ஆ) மார்ச் 20 இ) மே 20 ஈ) மார்ச் 25

3) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம்

ஈ) பகுதி, விகுதி

4) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

5) ஆசிரியப்பாவிற்குரிய ஓசை

அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

6) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ________ நினை

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

7) மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை ________

அ) குறவஞ்சி ஆ) திருச்சாழல் இ) கலம்பகம் ஈ) உலா

8) "என் வாழ்வு என் கைகளில்" - என்று நம்பியவர்

அ) பசுவய்யா ஆ) பாரதிதாசன் இ) ப. ஜீவானந்தம் ஈ) சுந்தர ராமசாமி

9) Touch Screen என்பதன் தமிழ்ச்சொல்

அ) திறன்பேசி ஆ) சுற்றறிக்கை இ) தொடுதிரை ஈ) நுண்கலைகள்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



26) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக

அ) அணிந்துரை ஆ) நீரோடை

27) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

28) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

கால்நடை அல்லது பிண்ணாக்கு

29) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

அ) Passport ஆ) Debate

30) திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக

பகுதி - III

பிரிவு - 4

III. குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) இன்குலாப், " உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

33) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

36) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

39) பிறிது மொழிதல் அணியை சான்றுடன் விளக்குக. (அல்லது)

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

10) கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்
காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்
அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

11) தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

12) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு
அ) பெயர்மரபு ஆ) வினைமரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

13) வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர்
அ) அப்துல்ரகுமான் ஆ) பிரமிள் இ) வில்லிபுத்தூரார் ஈ) சுரதா

14) செங்கயல் - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உரிச்சொற்றொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுதி - II

### பிரிவு - 1

II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:- 3×2=6

15) இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக
16) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18) 'செந்தூக்கு' - விளக்கம் தருக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:- 2×2=4

19) உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
20) நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

குறிப்பு:- எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) உயிரீறு, மெய்யீறு - எடுத்துக்காட்டுடன் விவரிக்க
23) ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) முனிவிலர் ஆ) ஏகுமின்
24) மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
உலை, உளை, உழை
25) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

www.Padasalai.Net

கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

\- கவிமணி

41) மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன் விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.

பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், முகவரி, அலைபேசி எண், கல்வித்தகுதி, அறிந்த மொழிகள்

(அல்லது)

42) பாலைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

பொருண்மொழிக் காஞ்சித் துறையை சான்றுடன் விளக்குக.

43) விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

அ) தனிமொழி - அறிவு ________ வண்ணமயில்; பொதுமொழி - ________

ஆ) கார்காலம் - ________ குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை , ________ மார்கழி, தை

இ) எழுத்து ________ சீர், தளை, ________ , தொடை

ஈ) சேரன் - வில், சோழன் ________ , ________ மீன்

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-** **3×6=18**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. (அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45) அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க. (அல்லது)

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

46) அ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க. (அல்லது)

ஆ) புலம் பெயர்ந்த மக்களின் வலியையும், வாழ்வையும் ஆறாம் திணை வாயிலாக நீவிர் அறிவதைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47) அ) "உண்டால் அம்ம" எனத் தொடங்கும் புறநானூறு பாடல்

ஆ) 'விடற்கு' என முடியும் குறள்

****/****

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com